காலை முரசு

பக்கங்கள் 17

## மாகாண சபைத் தேர்தல்: இன்னும் முடிவு இல்லை

### அநுர அரசு அறிவிப்பு



“இலங்கையில் மிகக் குறுகிய காலப் பகுதிகளுக்குள் 3 தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. தற்போது நாட்டின் 03

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 04 புதன்கிழமை 18.06.2025 அதிர்வு 318

## மனிதக் கொலைகள், புதைகுழிகள் தொடர்பில்



# டக்ளஸிடமும் விசாரியுங்கள்

## நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. வலியுறுத்து

**“1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தின் மண்டைதீவு, அல்லைப்பிட்டி மற்றும் மண்கும்பான் பகுதிகளிலிருந்து இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட எண்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலும், மண்டைதீவு, செம்பாட்டுத் தோட்டம் - புனித தோமையார் தேவாலய வளாகத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியுடன் தொடர்புடைய கொலைகள் பற்றியும் இலங்கை இராணுவத்தின் துணை ஆயுதக் குழுவான ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை விசாரணை செய்ய வெண்டும்.”**




– இவ்வாறு யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் வலியுறுத்தினார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற சபை அமர்வில், நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 27.2 இன் கீழ், நாடாளுமன்றக் குழுத் தலைவராக, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்சன நாணயக்காரவிடம் வாய்மொழி மூல விடைக்கான வினாக்களை முன்வைக்கும் போதே சிறீதரன் எம்.பி. இந்த விடயம் குறித்து கேள்வி எழுப்பினார்.

இந்த விடயம் சார்ந்து, வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையைச் சமர்ப்பித்ததோடு, அதனை மேற்கோள் காட்டி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:–

“கடந்த 2010 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழ் மக்கள் மீது மேற்கொள் 02

# வடக்கில் பல மனிதப் புதைகுழிகள் வதந்தியாம்

## இப்படிக் கூறுகின்றார் நீதி அமைச்சர் ஹர்ஷன

வடக்கில் உள்ள பல மனிதப் புதைகுழிகள் குறித்து வெளியிடப்பட்ட தகவல்கள் வதந்திகளை அடிப்படையாகக் கொண்டவை என்றும், சரியான தகவல்கள் இல்லாமல் அரசு இவற்றின் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இல்லை என்றும் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மண்டைதீவில் உள்ள மனிதப் புதைகுழி குறித்து வெளியிடப்படும் தகவல்கள் வதந்திகளை மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

இருப்பினும், திருகேஸ்வரத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மனித உடல் பாகங்கள் ‘கார்பன் டேட்டிங்’ சோதனைகளுக்காகப் ‘புளோரிடா’வுக்கு அனுப்பப்படவுள்ளன என்றும் நீதி அமைச்சர் மேலும் 03






தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டத் தலைவராக இருக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் கட்சிக்கு எதிராகச் செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கும் நிலையில், அதற்கு எதிராக அவர் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை அவர் தாமாகவே விலக்கிக் கொள்வார் என நேற்று என் பத்தியில் கோடி காட்டி இருந்தேன்.

நான் குறிப்பிட்டபடி நேற்று அந்த வழக்கு யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட சமயம் வழக்கை வைத்தியர் சிவமோகன் கை வாங்கிக் கொண்டார்.

வழக்கை அவரின் 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் தாக்கல் செய்த சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரனின் ஆலோசனையையும் மீறி, அவர் அதனை விலக்கிக் கொண்டார் என்பது அந்த வழக்கையொட்டிய நேற்றைய பதிவில் தெளிவானது. இந்த வழக்கை விலக்கிக் கொள்ள வேண்டாம் என்று தாமளித்த பரிந்துரையை மீறி, வழக்காளி வழக்கை விலக்கிக் கொள்கின்றார் என்ற பதிவை சட்டத்தரணி குருபரன் வழக்கில் நேற்றுப் பதிவு செய்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிராளித் தரப்பான தமிழரசுக் கட்சி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன் வழக்குச் செலவு ஒன்றும் கோராதமையாலும், வழக்கை விலக்கிக் கொள்வதற்கு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காதமையாலும் வழக்கை முடிவுறுத்த நீதிமன்றம் அனுமதி அளித்தது.

இந்த வழக்கை நேற்று வைத்தியர் சிவமோகன் விலக்கிக் கொள்ளுகிறார் என்று நான் என் பத்தியில் நேற்றுக் காலையிலேயே கோடி காட்டியமையை அடுத்து கட்சியின் எம்.பி. ஒருவர் சிவமோகனைக் காலையிலேயே தொடர்பு கொண்டு வழக்கை விலக்காமல் தொடர்ந்து நடத்தும் படி அவருக்குக் கடும் அழுத்தம் கொடுத்தார் என்றும் தெரிய வருகின்றது.

இந்த வழக்கை விலக்கிக் கொள்ளுவதற்கு முன்னர் வைத்தியர் சிவமோகனை, கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் வவுனியாவில் சந்தித்துப் பேசி, சமரசமான சில இணக்கப்பாடுகளுக்கு முற்கூட்டியே வந்திருந்தார் என சில வட்டாரங்கள் நேற்று முன்தினம் தெரிவித்தன என்று நேற்று என் பத்தியில் குறிப்பிட்டு இருந்தேன். ஆயினும் அதனை சுமந்திரனோ, வைத்தியர் சிவமோகனோ உறுதிப்படுத்தவில்லை என்பதையும் அதில் தெரிவித்திருந்தேன்.

என் பத்தியை வாசித்த பின்னர் தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தொடர்பு கொண்டு அத்தகைய சந்திப்பு எதனையும் தாம் மேற்கொள்ளவில்லை என்றும், ஆயினும் இன்று நீதிமன்றத்தில் இந்த வழக்குக்காக கட்சியின் சார்பில் தான் முன்னிலையாகும் போது அங்கு சிவமோகனைச் சந்திக்கக் கூடும் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆக, இந்த வழக்கை விலக்கிக் கொள்வது தொடர்பில் கட்சி நிர்வாகிகளுடன் எவ்வித முன் உடன்பாட்டுக்கும் வைத்தியர் சிவமோகன் போகவில்லை என்பது தெளிவாகியுள்ளது.

என்றாலும், அவராகவே கட்சிக்கு எதிரான வழக்கை விலக்கிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கின்றமையினால் கட்சியில் இருந்து அவரை இடைநிறுத்திய செயற்பாடு தொடர்பில், கட்சியும் விரைவாகத் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு விடயத்தைச் சுமுகமாகத் தீர்க்கக் கூடும் எனத் தெரிகிறது.

தம்மை கட்சியிலிருந்து இடைநிறுத்திய நடவடிக்கைக்கு எதிராக, பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு முன்னர் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை பெறுவதற்கே வைத்தியர் சிவமோகன் இந்த வழக்கை தொடுத்திருந்தார். ஆயினும் அந்த இடைக்கால உத்தரவை வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னர் அவரால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

அந்தப் பின்புலத்திலேயே இப்போது வழக்கை அவர் வாபஸ் பெற்றிருக்கிறார்.

★★★

கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசாலையில் பணிபுரியும் மிகப் பிரபல்யம் வாய்ந்த நரம்பியல் சிகிச்சை விசேட நிபுணரான பெண் வைத்தியரும், அந்த வைத்தியசாலையின் நிர்வாக உதவியாளர் ஒருவரும், அந்த வைத்தியரின் தனிப்பட்ட ஊழியர் ஒருவரும் ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் நேற்றும் கைது செய்யப்பட்டு, கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

கொழும்பில் மிகவும் மதிக்கப்படுகின்ற நரம்பியல் சிகிச்சை நிபுணரான வைத்தியர் திருமதி மகேஷி சூரசிங்க விஜயரத்தின என்பவரே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

மருத்துவமனையின் வருடாந்த கொள்முதல் மதிப்பீடுகளில், நரம்பியல் அறுவை சிகிச்சைக்குத் தேவையான முக்கிய சிகிச்சைக் கருவிகள், உபகரணங்கள் போன்ற பொருள்களை வைத்தியசாலை கொள்முதல் செய்யும் மதிப்பீடுகளில் இவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு சேர்க்கவில்லை என ஊழல் தொடர்பான புலனாய்வு அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

வைத்தியசாலை அந்தக் கருவிகளை குறைந்த விலையில் கொள்வனவு செய்வதை முறையற்ற விதத்தில் தடுத்து விட்டு, சம்பந்தப்பட்ட மருத்துவர் மற்றும் தொடர்புடைய ஊழியர்களின் மேற்பார்வையின் கீழ் நோயாளிகளை வெளிப்புற நிறுவனங்களில் இருந்து இந்தப் பொருள்களை நேரடியாகப் பணத்துக்குப் பெற்றுக்கொள்ள இவர்கள் அறிவுறுத்தி, வழிநடத்தினர் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

மருத்துவமனையின் விநியோகப் பிரிவை இந்தப் பொருள்களை கொள்வனவு செய்து வைக்குமாறு வேண்டுமென்றே இவர்கள் கூறாமல் தவிர்த்தனர் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஊழல், மோசடி தவிர்ப்பு ஆணைக் குழு இவ்வாறு அறுவை சிகிச்சைக்குச் சென்ற 300 நோயாளிகள் தங்கள் சொந்தச் செலவில் சுமார் 17 ஆயிரத்து 500 விலையில் வாங்க வேண்டிய கருவிகளை சுமார் ஒன்றே கால் லட்சம் முதல் இரண்டரை லட்சம் ரூபா வரை செலுத்தி வாங்கியுள்ளனர் என்றும் -

அவர்களில் 77 பேரின் வாக்குமூலங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் - நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் நாட்டில் பல்வேறு வைத்தியசாலைகளிலும், வேறு பல நிறுவனங்களிலும் பணியாற்றும் வைத்தியர்கள் உட்பட பலரின் வயிற்றைக் கலக்கி இருக்கும் என்பது நிச்சயம்..

அநுரகுமார திசநாயக்கவின் அரசாங்கம் 'லேட்' ஆக வேலையைத் தொடங்கினாலும், 'லேட்டஸ்ட்' ஆகத் தன் கைவரிசையைக் காட்டுகின்றதோ என்று தோன்றுகின்றது....!

## டக்ளஸிடமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பட்ட போர் காரணமாக காணமல் ஆக்கப்பட்டவர்களும், படுகொலை செய்யப்பட்டவர்களும் மனித எலும்புக்கூடுகளாகவும், எச்சங்களாகவும் புதைகுழிகளிலிருந்து மீட்கப்படுவதை தாங்களும் அறிவீர்கள். அந்தவகையில் மண்டைதீவு, செம்பாட்டுத் தோட்டம் – புனித தோமையார் ஆலயத்தின் அருகாமை, திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு குமுழமுனை, கொக்குத்தொடுவாய், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளின் வரிசையில் தற்போது யாழ்ப்பாணம், அரியாலை – சித்துப்பாத்தி பகுதியிலிருந்தும் மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இவை முழுமையாக தமிழ் மக்களுடையவைதான் என்பது தெளிவாகின்றது.

குறிப்பாக செம்மணிப் புதைகுழிக்கு அருகிலுள்ள அரியாலை – சித்துப்பாத்தி மயானத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வின் போது மீட்கப்பட்ட கைக்குழந்தைகள், பெண்கள், ஆண்கள், சிறுவர், சிறுமியரது என்புக்கூடுகள் எந்த ஆடைகளுமற்று அடித்து நொறுக்கி, சித்திரவதை செய்து கொல்லப்பட்டவர்களின் என்புக்கூடுகள் என்பதையே நீதித்துறையும், தடயவியல் நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். அந்தவகையில் மனிதப் புதைகுழிகள் மலிந்த இடமாகவே வடக்கு, கிழக்கு பகுதிகள் உள்ளன என்பதை நீதி அமைச்சர் அறிவாரா?

தற்போது யாழ்ப்பாணம், அரியாலை – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தோண்டி எடுக்கப்படும் மனித என்புக்கூடுகள் தொடர்பில் பக்கச்சார்பில்லாத – நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் வெளிக்கொணரப் படுமா? இதற்கு முன்னர் நடைபெற்ற முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளின் அகழ்வுப் பணிகள் நிறைவு பெற்றுவிட்டதா என்பதையும், அது சார்ந்து நீதித்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை என்பதையும் அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிப்பாரா?

மண்டைதீவு, செம்பாட்டுத்தோட்டம் – புனித தோமையார் தேவாலயப் பகுதியில் உள்ள மனிதப் புதைகுழியில், 1990 களில் வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் இருந்து அழைத்து வரப்பட்ட சிறுவர்களும், இளைஞர்களுமே புதைக்கப்பட்டார்கள் என வடக்கு, கிழக்கு மனித உரிமை அமைப்புகள் குறிப்பிடுகின்றன. இது சார்ந்த விசாரணைகள் மேற்கொள்ளப் படுமா என்பதை நீதி அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிப்பாரா?

3 ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த திருமதி.ஆசைதாஸ் யேசுரட்ணம் தர்மராணி என்ற தாயார், தனது இரு பிள்ளைகள் உட்பட்ட 84 பேர் மண்டைதீவில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான நீதியைப் பெற்றுத் தருமாறும் 2025.04.30 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, அதன் பிரதியை எனக்கும் கிடைக்கச் செய்துள்ளார்.

1990 ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விகளோடு காத்திருக்கும் இந்தத் தாய்மாருக்கு நீதி அமைச்சரின் பதில் என்ன?

திருக்கேதீஸ்வரம் பகுதியில் அடையாளப்படுத்தப்பட்ட மனிதப் புதைகுழியின் அகழ்வு கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதன் உண்மை நிலை எப்போது வெளிவரும் என்பதை அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிக்க வேண்டும்." – என்றார்.

# வடமராட்சியின் தலைநகராக பருத்தித்துறையை மாற்றுவோம்

## எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறை நகரினை மீளவும் வடமராட்சியின் தலைநகராக மாற்ற வேண்டும் என்று தமிழ்த் தேசிய பேரவையில் அங்கம்வகிக்கும் தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முன்னர் வடமராட்சியின் தலைநகரமாக பருத்தித்துறை நகரே இருந்தது. அந்த நிலையை நாம் மீண்டும் உருவாக வேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபடும் புதிதாக தெரிவு



செய்யப்பட்ட வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையிலான சபைக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.

புதிய தவிசாளரின் தந்தை வின்சன் டீ போல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் பருத்தித்துறை நகரசபையின் பிரதி தவிசாளராக இருந்த காலத்தில் சிறப்பாக செயற்பட்டிருந்தார். நீண்ட கால இடைவெளியில் அவரது மகன் டக்ளஸ் போல் பருத்தித்துறை நகரசபை தவிசாளராக வந்துள்ளார். தந்தையின் வழியில் அவரும் சிறந்த சேவையை பருத்தித்துறை நகரின் வளர்ச்சிக்கு ஆற்றுவார்.

அவரோடு இணைந்து நாம் எல்லோரும் பருத்தித்துறை நகரினை மீளவும் வடமராட்சியின் தலைநகராக மாற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டும். அந்த வகையில் நாம் எமது முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம்.” என்றார்.

# எரிபொருளை பதுக்குபவர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தீவிர கண்காணிப்பு

(எஸ்.ரகுதீஸ்)

யாழில் எரி பொருள் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த எரிபொருளை பதுக்கும் நோக்கில் பாரிய கலன்களில் கடத்துபவர்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இலங்கையில் இரண்டு மாத காலத்திற்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், யாழில் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் பலர் 20 லீற்றருக்கும் அதிகமான பெட்ரோலை கலன்களில் பெற்று பதுக்கி வருகின்றனர்.

இதுதொடர்பில் புலனாய்வாளர்கள் கண்காணித்து வருவதுடன் அவர்களின் வீடுகள் முற்றுகையிடப்படவுள்ளன என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தண்டவாளத்தில் இருந்த இளைஞர் ரயில் மோதியதால் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

அரியாலை புங்கங்குளம் ரயில் தண்டவாளத்தில் குந்தியிருந்த இளைஞர் ஒருவர் ரயில் மோதியலில் உயிரிழந்தார்.

கேணியடி அரியாலையைச் சேர்ந்த தலையசிங்கம் சுதாகரன் (வயது 20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாண நொதேர்ன் வைத்தியசாலையில் கடமைபுரியும் அவர் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணியளவில் புங்கங்குளம் பகுதியில் உள்ள ரயில் தண்டவாவத்தில் இருந்துள்ளார்.

அந்த சமயம் அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற ரயில் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ். புகையிரத நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டது.

அங்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

சாட்சிகளை யாழ்ப்பாணம் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நாடாளுமன்ற சபை அமர்வில், நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 27.2 இன் கீழ், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்சன நாணயக்காரவிடம் வடக்கு மனிதப் புதை குழிகள் தொடர்பான விசாரணை தொடர்பாக வாய்மொழி மூல விடைக்கான வினாக்களைச் சிவஞானம் சிறீதரன் எம்.பி. முன்வைத்தார். அதற்குப் பதிலளிக்கும் போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே, அவற்றுக்கு முன்னுரிமையளித்து அதன் பின்னரே மாகாண சபைத் தேர்தல் குறித்து தீர்மானிக்கப்படும்.”

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“மாகாண சபைத் தேர்தல் குறித்து ஸ்திரமான தீர்மானம் ஒன்று எடுக்கப்படவில்லை. சுமார் 8 மாத காலப் பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பன நடத்தப்பட்டுள்ளன. தற்போது மக்கள் எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கமைய செயற்பட வேண்டும்.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இந்த அனைத்துக் காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டுதான் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான காலம் தீர்மானிக்கப்படும். அதற்கு முன்னர் இதனுடன் தொடர்புடைய சட்ட திருத்தங்களையும் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.” – என்றார்.




# கொழும்பு மாநகர சபையை அநுரவின் சதியால் இழந்தோம்

## இப்படிக் காரணம் சொல்கின்றது சஜித் அணி

"தேசிய மக்கள் சக்தியின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சதியாலேயே கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி இழந்தது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தியே கைப்பற்றியிருக்க வேண்டும். 60 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் மேயர் வேட்பாளர் ரிஸா சரூக்குக்கு ஆதரவு வழங்குவோம் என்று எழுத்து மூலம் உத்தரவாதம் தந்திருந்தனர்.

ஆனால், ஜேர்மனியிலிருந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடு திரும்பிய கையுடன் கொழும்பு மாநகர சபைக்குள் தலையிட்டு ஏற்படுத்திய சதியால் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

ஜனாதிபதியின் தலையீட்டினால் தான் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தால் ஐக்கிய மக்கள் சக்தியே கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்றியிருக்கும்.

இது எமக்குத் தோல்வி அல்ல. சதியால் 7 வாக்குகளால் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.

ஜனாதிபதியின் சதியால் கொழும்பு மாநகர சபையின் மேயராக வந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் விராய் கெலீ பல்தசாருக்கு வாழ்த்துக்கள்." – என்றார்.

# எந்தச் சூழ்ச்சியும் இங்கு நடக்கவில்லை! தோல்வியால் புலம்புவதை நிறுத்துங்கள்!!

## சஜித் அணிக்குக் கொழும்பு மேயர் பதிலடி

"கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவில் எந்தச் சதியும் நடக்கவில்லை. தோல்வியடைந்த சஜித் அணியினர் பொய்களைக் கூறிப் புலம்புவதை நிறுத்த வேண்டும்."

– இவ்வாறு கொழும்பு மாநகர சபையின் புதிய மேயராகத் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவு செய்யப்பட்டுள்ள விராய் கெலீ பல்தசார் தெரிவித்தார்.

'தேசிய மக்கள் சக்தியின் தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் சதியாலேயே கொழும்பு மாநகர சபையை ஐக்கிய மக்கள் சக்தி இழந்தது' – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே கொழும்பு மாநகர சபையின் புதிய மேயர் விராய் கெலீ பல்தசார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,



"கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவு விவகாரத்தில் எமது கட்சியின் தலைவர் ஜனாதிபதியோ அல்லது எமது கட்சியின் உயர்பீடமோ தலையிடவில்லை. ஜனநாயக முறைப்படி வாக்கெடுப்பு நடைபெற்றது. 61 உறுப்பினர்கள் எனக்கு ஆணை வழங்கினார்கள்.

கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்ற சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியினர் பல வழிகளில் வியூகங்களை வகுத்தனர். ஆனால், அவர்களின் வியூகம் இறுதியில் தோல்வியடைந்துவிட்டது.

தற்போது அவர்கள் பொய்களைக் கூறிப் புலம்பத் தொடங்கியுள்ளனர். மேயர் தெரிவில் எந்தச் சதியும் நடக்கவில்லை. தோல்வியால் புலம்புவதை அவர்கள் நிறுத்த வேண்டும். கொழும்பு மாநகரத்தின் செயற்றிட்ட நடவடிக்கைகளுக்கு அவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன்." – என்றார்.



# கட்சிக்குள் ஒற்றுமையைப் பாதுகாக்க முடியாத சஜித்தின் மிரட்டல்களுக்கு அஞ்சவேமாட்டோம்!

## அமைச்சர் நளிந்த விளாசல்

"கட்சிக்குள் ஒற்றுமையைப் பாதுகாக்க முடியாத எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மிரட்டல்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை."

– இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் இரகசியமாகவே தமது வாக்குகளைப் பதிவு செய்தனர். இவ்வாறு இரகசிய வாக்குப் பதிவின் போது பிரஜைகள் யாரிடமாவது இலஞ்சம் பெற்றிருக்கின்றனரா? இல்லையல்லவா? சுயாதீனமான ஜனநாயகமான தேர்தலில் இரகசிய வாக்களிப்பும் ஒரு பகுதியாகும். இரகசிய வாக்களிப்பா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்குரியதாகும்.

கொழும்பு மாநகர மேயர் தெரிவு எந்த வகையிலும் சட்டவிரோதமானதல்ல. இறுதி நேரத்திலேயே ஐக்கிய மக்கள் சக்தியினர் இரகசிய வாக்கெடுப்பு வேண்டாம் என்று கூறினர்.

தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சிகள் இணைந்து கூட்டணியமைப்பதாக இவர்கள் கூறவில்லை. அவ்வாறிருக்கையில் தற்போது ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியமைப்பது மக்கள் ஆணையை மீறும் செயல் அல்லவா?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிறைவடைந்து முடிவுகள் வெளியான போது சஜித் தரப்பு எழுப்பிய கோஷங்கள் இன்று சீதாவாக்கை நகர சபையிலிருந்து வெளிநடப்பு செய்யுமளவுக்குச் சென்றுள்ளது. மறுபுறம் தம்புள்ளையில் கட்சியின் தீர்மானத்துக்கு முரணாக 6 உறுப்பினர்கள் செயற்பட்டிருக்கின்றனர். கட்சிக்குள் ஒற்றுமையைப் பாதுகாக்க முடியாத எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் மிரட்டல்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை.

சுயாதீன உறுப்பினர்களானாலும், ஏனைய கட்சி உறுப்பினர்களானாலும் உள்ளூராட்சி சபைகளை முறையாக நிர்வகித்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கினால், அதனை எம்மால் தவிர்க்க முடியாது." – என்றார்.

# வீட்டில் மயங்கி விழுந்த இளைஞர் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

வீட்டில் மயங்கி விழுந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது இளைஞர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கந்தர்மடத்தைச் சேர்ந்த கேதீஸ்வரன் கௌனஅசான் (வயது 20) என்ற இளைஞர் ஆவார்.

நேற்று செவ்வாய்க்கிழமை (17) நண்பகல் மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதும் அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை யாழ்ப்பாண பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

இரத்த வாந்தி எடுத்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நெடுந்தீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த இராம நாதன் முத்துலிங்கம் (வயது 62) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை ஆவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை படுக்கையில் இரத்த வாந்தி எடுத்த நிலையில் மறுநாள் நெடுந்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை நெடுந்தீவு பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## அம்பலமாகும் அரசின் முகம்!

தமிழர் தாயகத்தில் பொதுமக்களின் காணிகளை கபளீகரம் செய்யும் கொழும்பு அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில் அதன் உள்நோக்கம் - கரவு எண்ணம் - மறைவான தந்திரோபாயத் திட்டம் - இப்போது வெளியாகி இருக்கின்றது.

இந்த விவகாரத்தை ஒட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் தாம் மனுதாரராகத் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு, ஆளும் பௌத்த - சிங்கள பேரினவாதத் தரப்பின் உண்மை முகத்தை அம்பலப்படுத்தி நிற்கின்றது.

வடக்கில் மக்களின் உரிமை கோரப்படாத பகுதிகளில் 5,960 ஏக்கர் காணிகளை அரசுடைமையாக சுவீகரிப்பதற்கு வழி செய்யும் வர்த்தமானியை மார்ச் 28 ஆம் திகதி சத்தம் சந்தடியின்றி அரசு வெளியிட்டிருந்தது. அதன்படி வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சட்ட ஆவண ரீதியாக முறைப்படி உரிமை கோரப்படாத அந்தப் பிரதேசக் காணிகள் அரசாங்கத்தினால் அரசு சொத்தாகப் பிரகடனப் படுத்தப்படுமென்று இந்த வர்த்தமானி தெரிவித்திருந்தது.

இதற்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்து எழுந்தமையை அடுத்து, இந்த வர்த்தமானி அறிவித்தலைக் கை வாங்குவதாக காணி அமைச்சு பகிரங்கச் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது. அது மாத்திரமில்லாமல், அந்த வர்த்தமானியைக் கை வாங்க அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்து, அதற்கான சட்ட முறைமை ஆலோசனையை வழங்கும்படி சட்டமா அதிபரை கடிதம் மூலம் காணி அமைச்சு கோரியும் இருந்தது.

ஆயினும் அந்த வர்த்தமானி கை வாங்கப்படாமல் காலம் இழுபட்டதனால் இந்த விடயத்தை ஒட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தாமே மனுதாரராக அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

அந்த மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் துரைராஜா, மேனகா விஜயசுந்தர, சமிந்த விஜயரத்தின ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அரசுத் தரப்பில் முன்னிலையான சிரேஷ்ட அரச சட்டத்தரணி சுரேகா அஹமத், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவையின் நிலைப்பாடு யாது என்று தெரியவில்லை, அதை அறிவதற்காக கால அவகாசம் தரவேண்டும் என்று கோரினார். அதன் அடிப்படையில் கால அவகாசம் வழங்கிய உயர்நீதிமன்றம், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மீண்டும் வழக்கை எடுத்துக் கொள்ளத் தீர்மானித்திருக்கின்றது.

உயர்நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட அரசுத் தரப்பின் தகவலின்படி பார்த்தால் -

மேற்படி தமிழ் மக்களின் காணிகளை கபளீகரம் செய்யும் வர்த்தமானியை கை வாங்க முடிவு செய்யப்பட்டிருப்பதாக காணியமைச்சு பகிரங்க செய்தி குறிப்பில் அறிவித்த பின்னரும் - அந்த வர்த்தமானியை கை வாங்குவதற்கான சட்ட முறைகளை வழிகாட்டும்படி சட்டமா அதிபரை எழுத்தில் கோரிய பின்னரும் - அந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை முடிவு என்று ஒன்று இன்னமும் எடுக்கப்படவில்லை, அது எடுக்கப்படாமல் விட்டால் இந்த வர்த்தமானி அறிவித்தல் கை வாங்கப்படாமல் விடப்படலாம் என்ற நிலைமையே நீடித்திருக்கின்றது என்பது அம்பலமாகி உள்ளது.

தமிழ் மக்களின் காணிகளை கபளீகரம் செய்யும் வர்த்தமானியை கை வாங்குவதாக ஒரு புறம் சொல்லிக் கொண்டு, மறுபுறம் அந்த வர்த்தமானி மூலம் வழங்கப்பட்ட மூன்று மாத காலக்கெடு தாண்டும் வரை விடயத்தை இழுத்தடிக்கும் எண்ணமே அரசுத் தரப்புக்கு இருந்திருக்கின்றது என்பது அம்பலமாகி இருக்கின்றது.

சுமந்திரன் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்த காரணத்தினாலேயே இந்த விடயத்தில் இன்னமும் அரசு வர்த்தமானியை கை வாங்கும் சட்ட ரீதியான முடிவு எதையும் எடுக்கவில்லை என்பது அம்பலமாகி இருக்கின்றது.

இந்த அரசு வழங்கும் வாக்குறுதிகளை - அறிவிப்புக்களை - நம்பி தமிழ் மக்கள் இனியும் ஏமாறக்கூடாது என்பதை இந்த விடயத்தில் அரசு கையாளும் முறைமை நமக்கு தெளிவாக உணர்த்தி நிற்கின்றது.



# யாழுக்கு நேற்றும் முன்தினமும் 60 பவுஸர் பெற்றோல் வந்தது

## ஆனாலும் மக்கள் தொடர்ந்து முண்டியடிப்பு

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு இரு நாள்களில் 60 பவுஸர் பெற்றோல் எடுத்து வரப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தெரிவிக்கின்றது.

ஈரானில் இடல்பெறும் போரை காரணம் காட்டி இங்குள்ள சிலரின் மன அச்சம் இரு நாள்களாக மக்களை வீதியில் பெற்றோல் வரிசையில் நிறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அதிக மக்கள் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு முண்டியடிப்பதனால் எரிபொருள் நிலையங்களில் நீண்ட வரிசை காணப்படுகின்றதே அன்றி எரிபொருள் தட்டுப்பாடு கிடையாது.

நீண்ட வரிசையை தடுப்பதற்காக திங்கள் கிழமை 16 ஆம் திகதி 6 ஆயிரத்து 600 லீற்றர் கொள்ளளவு கொண்ட 21 தாங்கி பெற்றோல் அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது.

21 தாங்கி பெற்றோல் எடுத்து வரப்போட்டபோதும் வரிசை குறைவடையாத காரணத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை யாழில் உள்ள 37 எரிபொருள் நிலையத்திற்குமாக 40 தாங்கி பெற்றோல் எடுத்து வரப்பட்டு விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இவற்றிற்கு அப்பால் 18 ஆம் திகதி இன்று 50 பவுஸர் பெற்றோல் எடுத்து வர அனைத்து ஏற்பாடும் செய்யப்பட்டதனால் இன்றுடன் பெற்றோல் தட்டுப்பாடு இருக்க மாட்டாது என நம்புகின்றோம் எனப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் தெரிவிக்கின்றது.



# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டது

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் நிலவும் மழையுடனான வானிலையை அடுத்தே வான் கதவு திறக்கப்பட்டுள்ளதாக, கொத்மலை நீர்த்தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் மழையுடனான வானிலை தீவிரமாகும் பட்சத்தில் ஏனைய வான்கதவுகளையும் திறப்பதற்கான சாத்தியம் நிலவுவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# கிழக்குப் பல்கலையின் புதிய உபவேந்தராக பேராசிரியர் பிரதீபன் நேற்றுப் பெறுப்பேற்பு

(கனகராசா சரவணன்)

கிழக்கு பல்கலைக்கழத்தின் 11 ஆவது உபவேந்தரா நியமிக்கப்பட்ட முன்னாள் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் நேற்று செவ்வாய்க்கிழமை தனது கடமைகளைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழ்த்தின் புதிய உபவேந்தரைத் தெரிவு செய்வதற்கான நேர்முக பரீட்சை பல்கலைக்கழகத்தின் பேரவையினால் இரண்டு மாத்திற்கு முன்னர் பல்கலைகழகத்தில் இடம்பெற்றது.

இதில் 8 பேர் களமிறங்கியிருந்தனர். முதல் நிலையில் முன்னாள் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் உட்பட 3 பேர் தெரிவு செய்யப்பட்டு பல்கலைகழக மானிய ஆணைக் குழு ஊடாக அந்தப் பெயர்பட்டியலல் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டது.

இதனடிப்படையில் முதல் நிலையிலுள்ள முன்னாள் விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபனை ஜனாதிபதி கிழக்கு பல்கலைக்கழகத்தின் 11 ஆவது உபவேந்தராக நியமித்து அதற்கான கடிதத்தினை நேற்று செவ்வாய்க்கிழமை அனுப்பிவைத்துள்ளார்.

இதனையடுத்து புதிய உபவேந்தர் நேற்றுப் பகல் 12.00 மணியளவில் தமது கடமையை உத்தியோக பூர்வமாக பெறுப்பேற்றுக் கொண்டார்



# இந்திய மீனவர்கள் மீண்டும் கடலுக்கு







(ந.லோகதயாளன்)

இந்தியாவில் அமுலில் இருந்த இரு மாத மீன்பிடித் தடைக் காலம் நிறைவுற்று இன்று அதிகாலை படகுகள் கடலிற்கு வருகை தந்துள்ளன.

ஏப்பிரல் 15 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரை நிலவிய மீன்பிடித் தடைக் காலம் நிறைவுற்றதன் பின்னர் இன்று 18 ஆம் திகதி அதிகாலை 3 மணிக்க அதிக படகுகள் கடலிற்கு மீன்பிடிக்காக பயணிக்கின்றன என தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

மீன்பிடிக்க நிலவிய தடைக் காலத்தில் இந்திய மீனவர்களின் அத்து மீறலின்றிக் காணப்பட்ட வடக்கு கடல் பரப்பில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல் தொடருமா என்ற ஐயம் உள்ளூர் மீனவர்களால் எழுப்பப்படுகின்றது.

இதேநேரம் கடலபரப்பில் காற்றின் வேகமும் அதிகரித்து காணப்படுவதனால் மீன்பிடியில் அதிக பாதிப்பு நிலவுவதாகவும் மீனவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.








# ஜனாதிபதி தலைமையில் கூடிய பாதுகாப்பு சார் ஆலோசனைக் குழு

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சு சார் ஆலோசனைக் குழு நேற்று நாடாளுமன்றத்தில் கூடியது.

இதில் பாதுகாப்பு பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா, முப்படைகளின் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை நிறுத்த கடற்படையின் உதவியைப் பெறுதல், வடக்கு மற்றும் கிழக்கில் காணிகளை விடுவிப்பது தொடர்பான பிரச்சினைகள் போன்ற பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளை நாடாளுமன்ற உறுப்பினர்கள், குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதன்படி, நியாயமான கோரிக்கைகளைப் பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி வழங்கியுள்ளார்.







# ஈரான் தலைநகர் தெஹ்ரானை விட்டு வெளியேற இந்தியர்களுக்கு வெளியுறவுத் துறை அறிவுறுத்தல்

இஸ்ரேல் – ஈரான் மோதல் தீவிர மடைந்து வருவதால், ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இந்தியர்கள் அந் நகரை விட்டு வெளியேறுமாறு இந் திய வெளியுறவுத் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

"தெஹ்ரானில் உள்ள இந்திய தூதர கம் செய்த ஏற்பாடுகள் மூலம், பாதுகாப்பு காரணங்களுக்காக தெஹ்ரானில் உள்ள இந்திய மாணவர்கள் நகரத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். போக்கு வரத்து வசதிகளைக் கொண்டுள்ள மற்ற குடியிருப்பாளர்களும் அதிகரித்து வரும் பதற்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு நகரத்தை விட்டு வெளி யேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சில இந்தியர்கள் ஆர்மீனியாவின் எல்லை வழியாக ஈரானை விட்டு வெளி யேற வசதி செய்யப்பட்டுள்ளது. சாத் தியமான அனைத்து உதவிகளையும் வழங்கும் நோக்கில் தூதரகம் தொடர்ந்து இந்தியர்களுடன் தொடர்பில் உள்ளது. நிலைமை சீராக இல்லாத நிலையில், மேலும் ஆலோசனைகள் வழங்கப் படலாம்." என தெரிவிக்கப்பட்டுள் ளது.

தெஹ்ரானில் இருக்கும் தூதரகத் துடன் தொடர்பில் இல்லாத அனைத்து இந்திய குடிமக்களும் உடனடி யாக தெஹ்ரானில் உள்ள இந்திய தூதரகத்தைத் தொடர்பு கொண்டு அவர்களின் இருப்பிடம் மற்றும் தொடர்பு எண்களை வழங்குமாறு கேட்டுக் கொள் ளப்படுகிறார்கள்" என்றும் சில இந்தி யர்கள் ஆர்மீனியாவுடனான எல்லை வழியாக ஈரானை விட்டு வெளியேற வசதி செய்யப்பட்டுள்ளது எனவும் இந்திய தூ தரகம் தெரிவித்துள்ளது.

ஈரான் மீது இஸ்ரேல் முழு அளவி லான தாக்குதலை நடத்தும் என்ற அச் சம் அதிகரித்து வருவதால், இத்தகைய அறிவிப்புகளை இந்திய தூதரகம் வெளி யிட்டு வருகிறது.

## அகமதாபாத் விமான விபத்து:

# மும்பைக்கு கொண்டு செல்லப்பட்ட விமானி சுமித் சபர்வாலின் உடல்



கடந்த வாரம் அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தின் விமானி கேப்டன் சுமித் சபர்வாலின் உடல் நேற்று மும்பைக்கு கொண்டு செல்லப்பட்டது.

விமானி சுமித் சபர்வாலின் உடல் நேற்று காலை விமா னம் மூலம் மும்பை விமான நிலையத்தை அடைந்து, அவரது குடும்பத்தினரால் பவாய் நகரில் உள்ள ஜல் வாயு விஹாரில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்படும் என்று ஏர் இந்தியா நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக சபர்வாலின் வீட்டில் ஒரு மணி நேரம் அவரது உடல் வைக்கப்படும். பின்னர் அவரது இறுதிச் சடங்குகள் சகாலா மின்சார தகன மைதா னத்தில் நடைபெறும் என்று அவர் கூறினார். சுமித் சபர்வால் (56) மும்பையில் உள்ள தனது வயதான பெற்றோருடன் வசித்து வந்தார்.

ஜூன் 12 அன்று 242 பயணிகள் மற்றும் பணியா ளர்களுடன் லண்டனுக்குச் சென்ற ஏர் இந்தியா விமானம் ஏ.ஐ-171 அகமதாபாத்தில் விபத்துக்குள்ளானது. இந்த விமானம் பி.ஜே. மருத்துவக் கல்லூரி விடுதி கட்டடத்தில் மோதியதில் விமானத்தில் இருந்த 241 பேர் உயிரிழந்தனர். மேலும், கட்டட வளாகத்தில் இருந்த 29 பேரும் உயிரிழந்தனர்.

அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான விமானத்தை கேப்டன் சுமித் சபர்வால் மற்றும் முதல் அதிகாரி கிளைவ் குந்தர் ஆகியோர் இயக்கினர். சுமித் சபர்வாலுக்கு 8,200 மணிநேரம் பறந்த அனுபவம் இருந்ததாகவும், குந்தர் 1,100 மணிநேரம் பறந்த அனுபவம் கொண்டவர் என்றும் விமானப் போக்குவரத்து ஆணையம் முன்பு தெரிவித்திருந் தது.




# இஸ்ரேல் – ஈரான் போர் வலுத்துள்ள சூழலில் எரியும் தீயில் ட்ரம்ப் எண்ணெய் ஊற்றுகிறார்

## சீனா குற்றச்சாட்டு

இஸ்ரேல் – ஈரான் போர் வலுத்து வரும் சூழலில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுகிறார் என சீனா குற்றம் சாட்டியுள்ளது.

இஸ்ரேல் – ஈரான் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஈரான் தலைநகர் தெஹ்ரானை விட்டு அனைவரும் உடனடியாக வெளியேற வலியுறுத்தி சமூக வலைதளப் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார். ட்ரம்ப் வெளியிட்ட பதிவில்,

“நான் கையெழுத்திடச் சொன்ன ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டிருக்க வேண்டும். எவ்வளவு அவமானம், எவ்வளவு மனித உயிரை வீணடிப்பது. எளிமையாகச் சொன்னால், ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது. நான் அதை மீண்டும் மீண்டும் சொன்னேன். பதற்றங்கள் அதிகரிக்கும்போது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் உடனடியாக தெஹ்ரானில் இருந்து வெளியேற வேண்டும்.” என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனிடையே, தெஹ்ரானின் மையப்பகுதியில் இருந்து 3 லட்சம் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேலும் எச்சரித்தது. நேற்று முன்தினம் இரவு முதலே ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலை நடத்தி வரும் நிலையில், இந்த எச்சரிக்கையை அந்நாடு வெளியிட்டது.

இந்நிலையில், ட்ரம்பின் கருத்து குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் குவோ ஜியாகுன்,

“தீயை மூட்டுவது, எண்ணெய் ஊற்றுவது, அச்சுறுத்தல்களை விடுப்பது, மென்மேலும் அழுத்தத்தை அதிகரிப்பது ஆகியவை நிலைமையின் தீவிரத்தை குறைக்க உதவாது. மாறாக, மோதலை தீவிரப்படுத்தி விரிவுபடுத்தும். இஸ்ரேல் மீது சிறப்பான செல்வாக்கை கொண்டிருக்கும் நாடுகள், தங்கள் பொறுப்புகளை உணர்ந்து பதற்றங்களைத் தணிக்க உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், மோதல் விரிவடைந்து பரவுவதைத் தடுக்க வேண்டும் என்றும் சீனா வலியுறுத்துகிறது.” என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இஸ்ரேலில் வசிக்கும் சீனர்கள் அந்த நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று இஸ்ரேலில் உள்ள சீனத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது. சீன தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இஸ்ரேலில் உள்ள சீன நாட்டினர் தங்கள் தனிப்பட்ட பாதுகாப்பை உறுதி செய்துகொள்ள எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக இஸ்ரேலை விட்டு வெளியேற நினைவூட்டுகிறது.

தரை மார்க்கமாக எல்லையை கடக்கவும், ஜோர்டன் வழியாக வெளியேறவும் பரிந்துரைக்கப்படுகிறது. ஏனெனில், தொடர்ந்து மோதல் அதிகரித்து வருகிறது. பெரும்பாலான பொதுமக்களின் சொத்துகள் சேதமடைந்துள்ளன. பொது மக்கள் உயிரிழப்பதும் அதிகரித்து வருகிறது. மேலும் பாதுகாப்பு நிலைமையும் மிகவும் மோசமாகி வருகிறது,” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தெஹ்ரானை விட்டு அனைவரும் உடனடியாக வெளியேறவேண்டும்

## ட்ரம்ப் எச்சரிக்கை



ஈரான் – இஸ்ரேல் போர் தீவிரமடைந்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அனைவரும் தெஹ்ரானை விட்டு உடனடியாக வெளியேறுமாறு ஓர் அச்சுறுத்தும் அழைப்பை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் ட்ரம்ப் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவுகளில்,

“நான் கையெழுத்திடச் சொன்ன ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட்டிருக்க வேண்டும். எவ்வளவு அவமானம், எவ்வளவு மனித உயிரை வீணடிப்பது. எளிமையாகச் சொன்னால், ஈரான் அணு ஆயுதத்தை வைத்திருக்க முடியாது. நான் அதை மீண்டும் மீண்டும் சொன்னேன். பதற்றங்கள் அதிகரிக்கும்போது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் உடனடியாக தெஹ்ரானில் இருந்து வெளியேற வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து தெஹ்ரானின் மையப்பகுதியிலிருந்து 3 லட்சம் மக்களை வெளியேறுமாறு இஸ்ரேலும் எச்சரித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு முதலே ஈரான் தலைநகர் தெஹ்ரான் மீது இஸ்ரேல் கடுமையான தாக்குதலை நடத்தி வருவதும் கவனிக்கத்தக்கது.

இதனிடையே, கனடா ஜி7 மாநாட்டில் கலந்துகொண்ட ட்ரம்பிடம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு ட்ரம்ப் பதிலளித்தார். சமீபத்தில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவிடம் பேசினீர்களா என்று ட்ரம்ப்பிடம் கேட்டபோது, “நான் எல்லோரிடமும் பேசிவிட்டேன்“ என்று பதிலளித்தார்.



# எரிபொருள் தட்டுப்பாடு இல்லை; வலுசக்தி அமைச்சு அறிவிப்பு

எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என பல்வேறு போலி மற்றும் உண்மைக்கு புறம்பான செய்திகள் சமூக ஊடகங்களில் பரப்பப்படுவதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த 2 மாதங்களுக்கு தேவையான எரிபொருள் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கையிருப்பிலுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்தது.

இதனிடையே, மத்திய கிழக்கில் நிலவும் மோதல் நிலைமையை கருத்தில் கொண்டு உலக சந்தையில் எரிபொருள் விலை குறித்த அறிக்கையை வழங்குமாறு வலுசக்தி அமைச்சு இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திடம் கோரியுள்ளது.



# கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக கடமையேற்றார் அஸ்மி

(அபு அலா)

கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரி ஏ.எல்.எம்.அஸ்மி தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவினால் நேற்றையதினம் நியமிக்கப்பட்டு விவசாய அமைச்சின் கடமைகளை உடன் செயற்படும் வண்ணம் அவர் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவையின் மூத்த அதிகாரியான ஏ.எல்.எம்.அஸ்மி, கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகித்து வரும் நிலையில் கிழக்கு மாகாண விவசாய நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகத்திற்குமான அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொத்துவில், அக்கரைப்பற்று உதவி பிரதேச செயலாளர், அக்கரைப்பற்று மாநகராட்சி ஆணையாளர், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளரும், பதிவாளரும், கல்முனை மாநகராட்சி ஆணையாளர், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர், (ஆளணி மற்றும் பயிற்சி) கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகிய பதவிகளில் அவர் வினைத்திறன் மிக்க அதிகாரியாக சிறப்பாக கடமையாற்றியுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் 22 வருடங்கள் கடந்து பயனிக்கும் இவர் அரச கடமையினை சட்ட விதிமுறைகளை பேணி தான் எடுத்த உறுதி மற்றும் சத்திய உரை என்பவற்றுக்கு ஏற்ப நேர்மையாக செய்துவரும் ஒருவர் என்று மதிக்கப்படுபவர்.

அஸ்மியின் சேவைத் தரம், தகுதி மற்றும் அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலும் தலைமைத்துவ வழிகாட்டல்கள், நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாட்டு திறமைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.




# அம்பாறையிலும் எரிபொருளைப் பெற வாகனங்கள் வரிசையில் காத்திருப்பு!

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்கள் நேற்று நீண்ட வரிசையில் காத்திருந்தமையைக் அவதானிக்க முடிந்தது.

மத்திய முகாம், சவளக்கடை, நற்பிட்டி முனை, வளதாப்பிட்டி போன்ற பிரதேசங்களில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் சிரமத்துக்கு மத்தியில் காத்துக் கொண்டிருந்தனர்.

இது கடந்த கால எரிபொருள் தட்டுப்பாட்டு வரிசையை ஞாபகமூட்டியது.

உலக நாடுகளில் போர் பதற்றம் உருவாகிவரும் நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு உருவாகலாம் என பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ள நிலையில் இந்நிலை உருவாகியுள்ளது.

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களே அதிகமாக பெற்றோலை பெற்றுக்கொள்வதற்காக வரிசையில் காணப்பட்டன.

இதேநேரம் டீஸலைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டும் கனரக வாகனங்கள் உள்ளிட்ட வாகனங்கள் காத்திருந்தன.

அரச உத்தியோகத்தர்களும் பெற்றோல் தட்டுப்பாடு உருவாகலாம் எனும் அச்சத்தில் நீண்டதூரம் கடமைக்கு செல்வது தொடர்பிலும் கவலை அடைந்துள்ளனர்.

எரிபொருள் நிலையங்களில் அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காகப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளமையையும் அவதானிக்க முடிந்தது.








# கரடியனாறு – பதுளை வீதியில் நித்திரை செய்தவரின் தலை மீது வாகனம் ஏறியதில் இளைஞன் உயிரிழப்பு!

## போதையுடன் கூடத் தூங்கிய மற்றொருவர் அருந்தப்பு!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள பதுளை வீதியில் தும்பாஞ் சோலை பகுதியில் வீதியில் நித்திரரை செய்த இளைஞர் மீது வாகன ஏறியதில் அவர் உயிரிழந்தார். அவருக்கு அருகில் நித்திரை செய்தவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலையில் இடம்பெற் றது.

இளைஞன் மீது ஏறிய வாகனம் தப்பி ஓடியுள்ளதாகப் பொலிஸெ தெரிவித் தனர்.

மண்டூர் சின்னவத்தையைச் சேர்ந்த 25 வயதுடைய செல்வம் சாந்தன் செல் லையா என்பவரே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

செங்கலடி – பதுளை வீதியில் கரடி யனாறு தும்பாஞ்சோலை பகுதியிலுள்ள வீதிக்கு அருகிலுள்ள வேளாண்மை காவலுக்காக இந்த இளைஞன் உட்பட இருவர் நேற்று முன்தினம் திங் கட்கிழமை இரவு சென்று அங்கு வீதி ஓரத்தில் நித்திரை செய்துள்ள னர்.

நேற்று அதிகாலை 1.30 மணி யளவில் வீதி ஓரத்தில் நித்திரை செய்த இளைஞன் மீது வீதியால் சென்ற வாக னம் ஏறிச் சென்றதையடுத்து அவர் படுகாயமடைந்த நிலையில் வீதியில் கிடப்பதை கண்டு அவரை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழி யில் அவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை இளைஞனுடன் நித் திரை செய்த மற்றவர் தெய்வாதீன மாகத் தப்பியுள்ளார். அவர் கண்விழித்த போது ப்ச்க்கத்திலிருந்த இளைஞ னுக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலையில் அவர் இருந்துள்ளார். மது பானம் அருந்திவிட்டு வீதியில் நித்திரை செய்துள்ளனர் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசரணையில் தெரிய வந்துள்ளது.

இதேவேளை பிரேத பரிசோதனை யில் தலையில் வாகனத்தின் ரயர் ஏறி யதால் நேர்ந்த உயிரிழப்பு என சட்ட வைத்திய அதிகாரிகள் கண்டறிந்துள் ளதையடுத்து இளைஞன் மீது வாக னத்தை ஏற்றி விட்டுத் தப்பிய வாகனத் தைக் கண்டு பிடிப்பதற்கான விசார ணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை கரடியனாறு போக்குவரத் துப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

# இலங்கை – பிரான்ஸ் இடையே கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை



இலங்கை மற்றும் பிரான்ஸ் இடையி லான வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செயன்முறையுடன் தொடர்புடைய கடன் மறுசீரமைப்புக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கொழும்பில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் சார்பில் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவி ருத்தி அமைச்சின் செயலாளர் கே.எம். மஹிந்த சிறுவர்தன மற்றும் பிரான்ஸ் சார்பில் பலதரப்பு விவகாரங்கள், வர்த்த கம், அபிவிருத்தி கொள்கை திணைக் களத்தின் உதவிச் செயலாளரும் திறை சேரி பணிப்பாளர் நாயகமுமான விலியம் ரூஸ் ஆகியோர் இந்த உடன்படிக்கை யில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கை – பிரான்ஸ் இடையிலான வலுவான மற்றும் நீண்ட கால இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்த இந்த கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை கைச் சாத்திடப்பட்டமையினூடாக இயலுமை ஏற்பட்டுள்ளதாக நிதியமைச்சு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# திருமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் திறன் மேம்பாட்டுக்கான மாணவர் சந்தை நிகழ்வு

திருகோணமலை, பெருந்தெரு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு மாணவர்களது திறன் மேம்பாட்டுக்கான மாணவர் சந்தை நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி சனில் குமார் தலைமையில் பகுதித் தலைவர் திருமதி மா. சிவகரன் ஆசிரியர் ஏற்பாட்டில் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரும் திருகோணமலை மாநகர சபை உறுப்பினருமாகிய உதயகுமார் அஜித்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்தார்.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் என ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இருநூறு ஆண்டுகளைத் தாண்டி திருகோணமலையில் கல்விப் பணியை விக்னேஸ்வர மகா வித்தியாலயம் வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.



























# இன்றைய ராசி பலன்கள் -18.06.2025




இன்று வளர்ச்சி காண்பீர்கள். இன்று பல பயனுள்ள விஷயங்களை செய்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் பிறரைக் கவரும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பணிக்கான நன்மதிப்பும் அங்கீகாரமும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும் வாய்ப்பு உள்ளது. இன்று நீங்கள் முக்கிய முதலீட்டு முடிவுகளை எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்த விதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் எச்சரிக்கையும் தேவை. எதிர்பாரதவைகளைச் சந்திப்பீர்கள்.

பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். பணயில் வெற்றி காண புத்திசாலித்தனம் மற்றும் திறமைகளை பயன்படுத்துங்கள். எந்த சூழ்நிலையிலும் பதட்டமடையாதீர்கள். அதனால் உங்கள் ஆற்றல் குறைந்து விடும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இருவரும் பிரச்சினைகளை தீர்க்க கலந்து ஆலோசிக்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் திருப்தி கிடைக்கும்.

இன்று நிதிநிலை சுமாரான பயனைத் தரும். வரவும் செலவும் சமமாக யாருக்கும். நீங்கள் யோசித்துச் செயல்பட வேண்டும்.

இன்று முடிந்த அளவு அனுசரணையாக அமைதியாக இருக்கவும். உங்களுக்கு தெரிந்த அளவில் விஷயங்களை தைரியமாக கையாளுங்கள். உங்களுக்கு லேசாக தலை வலி காணப்படும்.




இன்றைய நாள் வெற்றிகரமாக அமைய பொறுமையும் அமைதியும் தேவை. பதற்றப்படாமல் சகஜமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் நீங்கள் சில கஷ்டங்களை சந்திக்க நேரும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் துணையிடம் அமைதியாகப் பேச வேண்டும். அதன் மூலம் அவர் உங்கள் மதிப்பை உணர்ந்து கொள்வார். நல்லுறவு ஏற்பட சரியான விதத்தில் உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காரணமாக பணப்பற்றாக்குறை காணப்படும். எதிர் காலத்துக்கென சேமிக்கும் பழக்கம் கொண்டிருந்தால் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

எந்தச் சூழ்நிலையிலும் பதற்றமடையாதீர்கள். உங்கள் ஆரோக்கியத்தை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை மேம்படுத்த வேண்டும்.பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் செயல்களில் தாமதங்களை சந்திக்க தயாராய் இருங்கள். திட்டமிடவேண்டியது அவசியம்.

சாதரணமாக ஆற்றும் பணிகளை விட இன்று சற்று கூடுதலான பணிகள் காணப்படும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தவறில்லாமல் கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சம்பாத்தியம் குறைந்து காணப்பட்டாலும் நீங்கள் சேமிக்கும் பழக்கம் கொள்வீர்கள். சேமித்த பணம் பற்றாக்குறை சமயத்தில் பலன் தரும்.

உங்களுக்கு தொண்டை வலி ஏற்படாமல் இருக்க குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று அனுகூலமான நாள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் காணும் நாள். உங்கள் சுய உந்துதலும் முயற்சியும் வெற்றியை பெற்றுத் தரும் நாள். உங்கள் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும் நாள்.

உங்களுக்கு இன்று பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு வெளிச்சத்திற்கு வரும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறைந்த நேரத்தில் தரமாக பணிகளை முடித்து தருவீர்கள்.

உங்கள் அன்பில் உங்கள் துணை மயங்குவார். அவருக்கு கிடைத்த முக்கியத்துவத்துக்கு மகிழ்ச்சியடைவார். இதன் மூலம் உறவு வலுப்படும்.

உங்கள் நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

நீங்கள் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்கள் நிறைவேற காத்திருங்கள்.

யாரும் உங்கள் பணிகளை கவனிக்காவிட்டாலும் தரமான பணிகளை வழங்குங்கள். உங்கள் பணிக்கான பாராட்டு இப்பொழுதில்லாவிட்டாலும் பிறகு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் பழகும் போது பொறுமை தேவை. நட்புடன் அவருக்கு விஷயங்களை புரிய வைக்க வேண்டும். உங்கள் உறவின் மகிழ்ச்சி முழுதும் உங்கள் கைகளில் தான் உள்ளது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய முடிந்த அளவு செலவை கட்டுப்படுத்த வேண்டும்.

தோல் பிரச்சினைகளை உருவாக்கும் என்பதால் இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ணாதீர்கள்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும். முக்கிய முடிவுகளை வேறு சமயத்துக்குத் தள்ளிப் போடுங்கள். உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தரமானதாக குறித்தநேரத்தில் வழங்குவது உங்கள் கைகளில் தான் உள்ளது.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடுங்கள். கவனச்சிதறலின்றி பணியாற்றுங்கள்.

உங்கள் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய இருவரும் சமமாக பொறுப்பேற்று செயல்பட வேண்டும். இருவரும் நட்புடன் இருந்தால் அனைத்தும் சிறப்பாக இருக்கும்.

பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். எவ்வளவு கவனமாக இருக்கிறீர்களோ அந்த அளவு பாதுகாப்பாக இருப்பீர்கள். அஜாக்கிரதை காரணமாக பணம் இழக்க வாய்ப்பு அளிக்காதீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அடிக்கடி உடற்பயிற்சி செய்யவும். முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உங்களை எப்பொழுதும் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இன்று தவறுகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணியாற்றவும். அர்ப்பணிப்புடன் பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுங்கள்.

இருவரும் எப்பொழுதும் உங்கள் கருத்துகளை சிறப்பாக பரிமாறிக் கொள்ள வேண்டும். எதைச் சொல்வதாக இருந்தாலும் அன்பாக அமைதியாக கூற வேண்டும்.

பணம் வந்து போகும். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

ஆரோக்கியமில்லாத உணவை உண்ணாதீர்கள். எண்ணெய் மற்றும் கார உணவுகள் உங்கள் முகத்தின் தோலை பாதிக்கும். முகத்தை அடிக்கடி தண்ணீரில் கழுவுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -18.06.2025




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உங்கள் உறுதியும் தைரியமும் உங்களை முன்னேற்றும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியை பாராட்டுவார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சொல்லிலும் செயலிலும் உங்கள் துணையிடம் நீங்கள் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவர் மகிழ்வார். உறவு வலுப்படும்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். இன்று நிதிநிலை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் விருப்பபடி அனைத்தும் நடக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதிபலிக்கும்.




இன்றைய நாள் அமைதியாக இருக்க பிரார்த்தனை மற்றும் தியானம் மேற் கொள்ளுங்கள். அனைத்து சூழ்நிலைகளையும் நீங்கள் சமாளிக்க தியானம் உங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணியாற்றும் பாணியில் கவனமாக இருங்கள். பணிகள் சிறிது அதிகமாக காணப்படும். அதனை நம்பிக்கையுடன் எற்றுக் கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள்.

உங்கள் இருவரிடையே சிறந்த தகவல் பரிமாற்றம் மற்றும் தெளிவு தேவை. இதன் மூலம் இருவர் உறவிலும் ஆர்வம் குறையாமல் இனிமை நிறைந்திருக்கும்.

ஏழைக்கு பண உதவி செய்வதன் மூலம் உங்களுக்கும் உங்கள் துணைக்கும் நல்ல பலன் கிடைக்கும். முன்னோர்களின் சாந்திக்கு சடங்குகள் செய்ய பணம் செலவழிப்பீர்கள். அவர்களின் ஆசி உங்களுக்கு எப்பொழுதும் கிட்டும்.

அதிக தண்ணீர் குடிப்பதும் எண்ணெய் பதார்த்தங்கள் தவிர்ப்பதும் உங்கள் ஆரோக்கியத்திற்கு சிறந்தது. ஆரோக்கியத்தை கவனிக்காமல் விட்டால் தோல் சம்பந்தமான பாதிப்புகள் ஏற்படும்.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தைரியமாக மேற்கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள். உங்கள் திறமைகளை காட்டுவதில் முனைப்பாக இருப்பதன் காரணமாக இன்று முழுவதும் பணியில் மூழ்கி இருப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் கட்டுப்பாடுடனும் பக்குவமாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு செழிப்பாக இருக்கும். இன்றைய நாளை மறக்க முடியாத நாளாக ஆக்க இருவரும் வெளியிடங்களுக்குச் சேர்ந்து செல்லுங்கள்.

இன்று நிதிநிலையில் நம்ப முடியாத அளவு பலன் இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் நீங்கள் திடமாக இருப்பீர்கள்.




வாழ்வில் உங்கள் பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்கு சிறிது பதற்றத்தை ஏற்படுத்தும். குழப்பம் ஏற்படாதபடி தெளிவான இலக்குகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிக்கு இப்பொழுது சிறந்த அங்கீகாரம் கிடைக்காது. என்றாலும் நீங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் நீங்கள் நினைத்ததைவிட விரைவில் அங்கீகாரம் பெறுவீர்கள். நல்ல நேரம் காத்திருக்கிறது என்பதை மனதில் கொள்ளுங்கள். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது வார்த்தைகளை தேர்ந்தெடுத்து பேசுங்கள். பக்குவமாகவும் நட்புடனும் நடந்து கொண்டால் நல்ல புரிந்துணர்வு வளரும்.

உங்கள் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்க பரிகாரம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். இறைவழிபாடு மற்றும் சிறப்பான திட்டம் மூலம் செலவுகளை கட்டுப்படுத்தலாம்.

இன்று சளி அல்லது இருமல் ஏற்படலாம். பருவ நிலைக்கேற்ற உணவை உட்கொள்ளுங்கள். மிகவும் குளிர்ச்சியான பதார்த்தங்கள் உண்ணாதீர்கள்.



# சிரேஷ்ட பிரஜைகளுக்கான வைப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி

2025 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டபடி, சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, கீழ்காணும் வகையில் சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்புத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

60வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் 2025 ஜூலை முதலாம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் திறக்கப்படும் நிலையான வைப்புகளுக்குக் குறித்த திட்டம் அமுல்ப்படுத்தப்படும்.

நிலையான வைப்புக் காலம் 12 மாதங்கள் ஆவதுடன், உயர்ந்தபட்ச வைப்புப் பெறுமதி ஒரு மில்லியன் ரூபாய்களாகும்.

சராசரி நிறையிடப்பட்ட நிலையான வைப்பு வட்டி வீதத்திற்கு (AWFDR) மேலதிகமாக வருடாந்த வட்டி வீதம் 3 சதவீதத்தினை சேர்த்துக் கிடைக்கின்ற பெறுமதி அல்லது குறித்த வங்கியால் வெளியிடப்படும் நிலையான வைப்பு வட்டி வீதத்துடன் 3மூ வீதத்தைச் சேர்த்துக் கிடைக்கின்ற பெறுமதி அல்லது இரண்டில் அதிகமுள்ள வட்டி வீதத்தைச் செலுத்துதல்.

ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு வட்டிச் சலுகையைச் செலுத்துவதற்காக 30 பில்லியன் நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.